**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS (Recorded through V.C)**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 156/2022 P.W. 9 /L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுஜித் ஆனந்த் (காவல் ஆய்வாளர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 25.02.2026.**

**இவ்வழக்கின் முதல் விசாரணை அதிகாரி தற்சமயம் பணிமாறுதலில் தென்காசி மாவட்டம், சங்கரன் கோவில் தாலுகா காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிசெய்து வரும் நிலையில் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொருட்டு வழக்கின் தன்மை மேற்படி சாட்சியின் பணியின் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி சாட்சிய விசாரணையானது இணைய தள காணொலி காட்சி வாயிலாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Microsoft Teams செயலி மூலம் பதிவுச் செய்யப்படுகிறது. மேற்படி சாட்சியானவர் தென்காசி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் காணொலி காட்சி அறையிலிருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும், அரசு தரப்பு வழக்கறிஞரும் முன்னிலையாகியுள்ளார்கள்.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது தென்காசி மாவட்டம், சங்கரன் கோவில் தாலுகா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.03.2020 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் ஜார்ஜ் அவர்கள் பதிவுச் செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை நான் எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 03.03.2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் குணசீலன் மற்றும் ஜெயமோகன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், மகசர் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

2. வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரான சீலன் என்ற பிரிக்ஸ்சீலன் முன்பிணை பெற்றதால் அவரை கைதுச்செய்யவில்லை. வழக்கின் புகார்தாரரான ஜேக்கப் ராஜ் மற்ற சாட்சிகள் 2, 3, 4, 5 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். காயம்பட்ட நபருக்கு சிகிட்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். அந்த காயச்சான்றின் அடிப்படையில் கொடுங்காயம் என்று தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவை இ.த.ச. 1860 பிரிவு 326 காயத்தைப் பொறுத்து மாற்றம் செய்தேன்.

3. பின்னர் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் எனது தனிப்பட்ட விசாரணையிலும் சம்பவம்உண்மை என தெரிய வந்ததால் 07.10.2020 ம் தேதி குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை** :

1. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அண்ணன் தான் வழக்கின் புகார்தாரர் என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் சம்பவத்தன்று குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வாகனத்தை சேதப்படுத்தினார் என்றால் அவ்வாறு எதுவும் புகார் பெறப்படவில்லை. வாதிக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். புகார்தாரர் மது போதையில் எங்கோ விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தி அதன்அடிப்படையில் உண்மைக்கு மாறான புகார் கொடுத்து அதை நான் சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறான குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

2. மேற்படி வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் மேற்படி ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஏற்கப்பட்டுஎன் முன்னிலையில் இணைய தள காணொலி காட்சி வாயிலாக தென்காசி மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையில் வைத்து சதீஷ் (Junior Assistant) முன்னிலையில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.